உ

சிவமயம்

920



அளவையூர் பெற்றெடுத்த

சான்றோனும் சைவப்பெரியாரும்

சமூகநலத் தொண்டரும் ஆகிய

## உயர்திரு. செல்லப்பா மயில்வாகனம்

(முன்னாள் சமாதான நீதிபதி)

# நினைவு மலர்

NP

22-07-1984

உ

சிவமயம்



அளவையூர் பெற்றெடுத்த

சான்றோனும் சைவப்பெரியாரும்

சமூகநலத் தொண்டரும் ஆகிய

## உயர்திரு. செல்லப்பா மயில்வாகனம்

( முன்னை நாள் சமாதான நீதிபதி )


# நினைவு மலர்

22-07-1984

அமரர்

# திரு. செல்லப்பா மயில்வாகனம்

( முன்னைநாள் சமாதான நீதிபதி )



தோற்றம் :
(1-09-1891

மறைவு :
22-07-1984

உ

சிவமயம்

## அளவையூர் பெற்றெடுத்த சான்றோனும்

## சைவப் பெரியாரும் சமூகநலத் தொண்டருமாகிய

# உயர்திரு. செ. மயில்வாகனம் அவர்கள்

(முன்னைநாள் சமாதான நீதிபதி)

# வாழ்க்கை வரலாறு

ஈழவள நாட்டின் வடபால் அமைந்த யாழ்நகர் தன்னில் அளவையூர் என்பது பல்கலை நிறைந்த பழம்பெரும் பதியாம், இப் பழம்பெரும் பதி தன் அகத்தே நான்கு பெரு விநாயகர் ஆலயங்களையும் இரு அம்பாள் ஆலயங்களையும் இன் இசை வல்லுநர்களையும் கலை ஆர்வம் மிக்க செந்தமிழ்ப் பெருங்குடி மக்களையும் கொண்டு விளங்குகின்றது.

பல நூற்றாண்டுகட்கு முன்னதாக சீதேவன் என்னும் மூதாட்டி இக்கிராமத்தில் வாழ்ந்துள்ளார். இம் மூதாட்டியால் சிதம்பரத்தில் பூசையில் வைத்து பூசித்து இங்கு கொணரப்பட்ட யந்திரம் அக்காலத்தில் கும்பழாவளை விநாயகர் ஆலய மூலஸ்தானத்தில் வைத்து பூசிக்கப்பட்டு வந்ததாகவும், இவர் தன் சொந்த முயற்சியால் தோண்டிய கிணறே இன்றும் இவ்வாலய மடப்பள்ளி அறைக்குள் இருக்கும் கிணறு என்றும் வரலாறு தெரிந்த முதியோர் கூறுகின்றனர். இம் மூதாட்டியின் பரம்பரையில் கர வருடம் ஆவணி மாதம் 18-ம் நாள் (1-9-1891) செவ்வாய்க்கிழமை ஆயிலிய நட்சத்திரத்தில் வேலாயுதர் செல்லப்பா சட்டம்பியார் என்பவருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் ஓர் சற்புத்திரன் தோன்றினார். அகமிக மகிழ்ந்த பெற்றோர் அன்னாருக்கு மயில்வாகனம் எனப் பெயர் சூட்டினர். பெற்றோருக்கு இவர் ஏகபுத்திரன் ஆவார்;

இளமைப் பருவத்தில் தன் தாயை இழந்த இவர் தகப்பனாரின் அரவணைப்பில் வளர்ந்து தன் தந்தையிடம் ஆரம்பக் கல்வி பயின்றார். அதனைத் தொடர்ந்து அருணாசல உடையாரால் ஆரம்பிக்கப்பட்ட

உடையார் பாடசாலை எனப் பெயர் கொண்ட இன்றைய அருணோதயக் கல்லூரியில் ஐந்தாம் வகுப்பு வரை பயின்றார். அங்கு தன் படிப்பை முடித்துக்கொண்ட இவர் சக நண்பர்களுடன் மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் இரு வருடங்கள் கல்வி பயின்றார், அப் பாடசாலையில் அக்காலத்தில் கடமையாற்றிய திரு. சின்னத்தம்பி என்னும் ஆசிரியர் இவர்தம் மதிநுட்பத்தையும் ஊக்கத்தையும் ஒழுக்க நெறியையும் நன்கு உணர்ந்து இவரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தொடர்ந்து மேற்படிப்பை படிப்பதற்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார். அக் கல்லூரியில் தொடர்ந்து பயின்ற இவர் (Senior Local) பரீட்சையில் சித்தியடைந்தார்.

திரு. மயில்வாகனம் அவர்கள் புத்திக் கூர்மையையும் கல்வி தகைமையையும் அவர்தம் ஆசாரத்தையும் கண்டறிந்த இக் கல்லூரி நிர்வாகம் இவரை அங்கு ஆசிரியராக அமர்த்தி பெருமை கொண்டது. இக் கல்லூரியில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றினார். இக் காலகட்டத்தில் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவப் பெருமகன் குமாரு என்பவரின் மகள் செல்லம் என்பவரை பெரியோர் இவருக்கு திருமணம் செய்து வைத்தனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை விட்டு விலகிய இவர் அக் காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சுவாமி சர்வானந்தா என்பவரின் அழைப்பினை ஏற்று வண்ணார்பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகப் பதவி ஏற்றார். அக்காலத்தில் இவருக்கு கொழும்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறும் வாய்ப்புக் கிட்டியது. துர் அதிர்ஷ்டவசமாக மூன்று மாதப் பயிற்சி முடிவடையும் காலத்தில் இவருக்கு ஏற்பட்ட நோய் இவரைப் பயிற்சி பெற முடியாது செய்து விட்டது. இக்காலத்தில் இவரின் மனைவியாரின் மாமனார் ஒருவர் றங்கூன் நகரில் பெரும் செல்வந்தராக வாழ்ந்து வந்தார். அன்னாரின் உதவியால் திரு மயில்வாகனம் அவர்கள் றங்கூன் சென்று அங்கு ரவுண் ஓவசியர் பதவியை ஏற்று ஒரு வருடகாலம் கடமை புரிந்தார் பின் யாழ்நகர் திரும்பி வந்து தனது மனைவியையும் தன் மகள் ஸ்ரீகாந்தாஅவர்களையும் அழைத்துக் கொண்டு திரும்பவும் றங்கூன் சென்று தன் பதவியைத் தொடர்ந்தார். இதன் பின் இவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து மறைந்தது. துர்அதிர்ஷ்டவசமாக மற்றும் ஒரு பெண் குழந்தையை பிரசவித்த போது மனைவியும் குழந்தையும் ஒருங்கே மறைந்தனர். மனம் மிக உடைந்த மயில்வாகனம் அவர்கள் தன் ஏக புத்திரனை

அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் திரும்பி இராசாவின் தோட்டத்தில் உறவினருடன் வாழ்ந்து வந்தார். இக்காலத்தில் இவருக்கு யாழ்ப்பாணத்து யோகர் சுவாமி அவர்களைச் சந்திக்கும் பேறு கிடைத்தது. அவரின் போதனைகளால் உந்தப்பெற்ற இவர் அவரின் சிஷ்யராகி அவரருளுக்குப் பாத்திரரானுர்.

இவரின் தகைமைகளைக் கேள்வியுற்ற அக்காலத்து இராமநாதன் கல்லூரி ஆசிரியர் திரு. சி கே. சுவாமிநாதர் அவர்கள் இவரை நேரில் சென்று அழைத்து இக்கல்லூரியில் கடமை புரிய வருமாறு வேண்டினுர்: தொடர்ந்து வந்த துன்பங்களினுல் வாழ்க்கையில் வெறுப்புற்ற இவர் மனம் துறவத்தை நாடியது. எனினும் மகன் ஒருவனின் நல்வாழ்வுக்காக தான் தொடர்ந்தும் வாழவேண்டும் என்ற உணர்வு மறுபுறம் தூண்டியது. இப்படியான மனப் போராட்டத்தின் மத்தியில் திரு. சி. கே. சுவாமிநாதருடன் உயர்திரு, சேர், பொன். இராமநாதனைச் சந்தித்து தனது மனநிலையை விளக்கும் வாய்ப்புக் கிட்டியது. அனைத்தையும் அமைதியுடன் செவிமடுத்த சேர் பொன். இராமநாதன் அவர்கள் துறவியாக வாழ்வதிலும் துறவு மனப்பான்மை கொண்டு சேவை புரிவதே சிறப்பு என விளக்க இவர் மனநிலை மாற்றம் பெற்று அன்று முதல் உள்ளத்தால் துறவியாகி சேவையே இலட்சியமாகக் கொண்டு இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராகப் பதவி ஏற்ருர். அங்கு இவர் கணிதம் புவியியல் மொழி பெயர்ப்பு போன்ற பாடங்களை அக்காலத்து மாணவருக்கு மிகத் திறமையுடன் புகட்டி வந்தார். 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக அங்கு ஆசிரியராகக் கடமையாற்றினுர், அதன்பின் சில ஆண்டுகள் அக்காலத்தில் சைவச்சிருரின் கல்வி வளர்ச்சிக்காக உழைத்த சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் காரியதரிசியாகப் பதவியேற்றுத் தலைவர் சு. இராசரத்தினம் அவர்களுடன் சேர்ந்து கல்விப்பணி புரிந்தார். பின் சிறுதுகாலம் தினகரன் பத்திரிகையின் உப பத்திராதிபராக கடமையாற்றினுர். இக்கடமைகளை எல்லாம் கண்ணியமாக ஆற்றியதுடன் தன் புத்திரனின் கல்வி வளர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாயிருந்து வந்தார். மகனுரும் இலங்கை சிவில் சேவையில் சேர்ந்து. நிரந்தர காரியதரிசியாகவும், மாகாண அதிபராகவும் திறம்பட கடமையாற்றி உதாரண புருஷராய் " இவன் தந்தை என்னேற்ருன் கொல் " என உலகு வியக்க வாழ்ந்து ஈராண்டுகளுக்கு முன் சிவபதம் அடைந்தார். திரு. மயில்வாகனம் அவர்கள் மீண்டும் 1939-ல் தனது சொந்த ஊரான அளவெட்டி மக்களுக்கு சேவை செய்யும் நோக்குடன் தனது சிற்றன்னையுடன் அளவெட்டியில் வசித்து வந்தார். அக்காலத்தில் அளவெட்டி கும்பழாவளை ஆலய தர்மகர்த்தாக்கள் சபைத் தலைவராக தெரிவு செய்

யப்பட்ட திரு. மயில்வாகனம் அன்று முதல் 1983-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பதவியில் இருந்து வந்தார். இவரது தலைமையின் கீழ் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் பலவகையிலும் பொலிவுற்று வளர்ச்சியடைந்து இன்றும் புகழ் பூத்து நிற்கின்றது. இவரின் சேவைக் காலத்தில் தம்ப மண்டபம் புதுப்பித்து அமைக்கப்பட்டது; தண்ணீர் தாங்கி, இராஜகோபுரம், வெளிமண்டபம், தேர்முட்டி ஆகியன அழகாக அமைக்கப்பட்டும், தேர் கொட்டகை மணிக்கூட்டு மண்டபம் ஆலயக் காரியாலயம் ஆகியனவும் இவற்றைவிட பிள்ளையார் வீதி என ஒரு வீதி திறக்கப்பட்டும் ஆலயம் மிகப்பொலிவுடன் விளங்குகின்றது இவரால் ஆரம்பிக்கப்பட்ட தீர்த்தக்குளத் திருப்பணி பொது மக்களின் உதவியால் மிகவிரைவில் பூர்த்தியாக்கப்பட்டு தீர்த்தத் திருவிழா முதல் அங்கு நிகழ்ந்ததையும் பார்த்து மனநிறைவு எய்தினர். முன்பு செயலாளராக உழைத்த காலஞ்சென்ற ஆசிரியர் திரு இ முருகேசு அவர்களினது நன் முயற்சியால் அமைக்கப்பட்ட கும்பழாவளை தொண்டர் சபை தர்மகர்த்தாக்கள் சபையினருக்கு பக்கபலமாக நின்று பொது மக்களின் நன்மதிப்பை பெற்று சிறப்புற்று விளங்குகின்றது.

இவர் பல வருடகாலமாக அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் தலைவராக செயலாற்றி பல்துறையிலும் அச் சபையின் வளர்ச்சிக்கு பாடுபட்டு உழைத்து வந்தார்.

அளவெட்டி கிராம முன்னேற்ற சங்கத்தில் கடமையாற்றிய நாட்களில் அரச உதவியுடனும் பொதுமக்களின் உதவியுடனும் அக்கட்டிடத்திற்கு அழகிய முகப்பினை அமைத்துத் தந்தார். அம் மண்டபத்தில் பக்கங்கட்கு யன்னல் கதவுகளை அமைத்துத் தனது கிராமத்து இளம் பெண்கள் நலம்பெற ஓர் நெசவுசாலையையும் நிறுவினர். இன்று அது வளர்ச்சியுற்று அரும் பெரும் சேவையாற்றி வருகின்றது; அரசாங்கத்தின் சிபார்சினுல் நிறுவப்பட்ட சமாதான சபையின் தலைவராக கடமை புரிந்து அக்காலத்தில் அரிய பல சேவை புரிந்து மக்களின் பெருமதிப்பைப் பெற்றுர் அளவை இசைக்கலை மன்றத்தை அமைத்து அதன் தலைவராக கடமையாற்றி பல இசைவிழாக்களை நடாத்தி மக்களுடன் சேர்ந்து தானும் மகிழ்ந்து கலைவாணிக்கு அளப்பரிய கடமையாற்றினுர். அரசு கையேற்கும் வரை அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் முகாமையாளராகவும் இராமநாதன் கல்லூரியின் உரிமையாளர் சு. நடேசபிள்ளை அவர்களது பொருட்களுக்கும் அக் கல்லூரிக்கும் பாது

காவலனாகவும் பணிபுரிந்தார். இப்படியாக இவர் ஆற்றிய அரும்பெரும் சேவைகளை நன்கு உணர்ந்த அரசு அவர்களைப் பாராட்டி சமாதான நீதிபதி பட்டம் கொடுத்து கௌரவித்தது. அளவையூர் வாசிகளுக்கு அவ்வப்போது ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை போக்குவதற்கு அன்னார் எடுத்த அரு முயற்சிகளை விபரிக்க முற்படின் கட்டுரை விரியும் என அஞ்சி விடுகின்றோம்.

இப்படியாக அரும் குணக்குன்றாய் ஆசார சீலராய் சமயநெறி தவறாச் சான்றோனாய் அன்புள்ளம் கொண்ட இவ்வருந் தமிழ்ப் பெரு மகனார் 1981-ம் ஆண்டு யூன் மாதம் 22-ந் திகதி வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

சிவ யோக சுவாமிகள் கட்டளைக்கு அமைந்து அவரால் காலத்திற்குக் காலம் எழுதி ''சிவதொண்டன்'' சைவ சஞ்சிகையில் வெளியிடப்பட்ட 'இன்பம்' 'அஸ்ட வக்கிரர் கீதை விளக்கம்' முதலியன இவரது ஆழ்ந்த சைவ ஞானத்திற்கு சான்றாய் அமையும். கற்பவை கற்று கற்றாங் கொழுகிய மிகச் சிலருள் ஒருவர் இத் திருவாளர். கசடற கற்றுத் தேறிய அறிஞர் பரம்பரை ஒன்று நம்மிடை விளங்கி வழிகாட்டியது அவ்வழி நின்ற இறுதி அறிவுக் களஞ்சியம் இப்பெரியார். அவர் சேவையே வாழ்வாய், தொண்டே இன்பமாய் மகிழ்ந்தவர்.

''ஒரு மொழி அன்னை வரம்பிலா ஞானம் உற்பக காரணன். என்றுந் தர்மமே துணைவன், கருணையே தோழன், சாந்தமே நலனுறு தாரம், அரிய இன்பொறையே மைந்தன் மற்றிந்த அறுவருமல்லா தாருறவு?'' எனச் சகாதேவன் பரமாத்மாவுக்கு எடுத்து உரைத்த சீலங்களையே உறவினராய் கண்டு வாழ்ந்த குரவரை என்றும் இன்பமே சூழும்.

சுபம்

# அளவெட்டியின் மணிவிளக்கு அணைந்தது!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒன்றாகிய பெரியார் திரு. செல்லப்பா மயில்வாகனம் அவர்களின் இழப்பு அளவெட்டிக் கிராமத்திற்கும் சிறப்பாகக் கும்பழாவளை விநாயகராலயத்திற்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

1948-ம் ஆண்டில் கும்பழாவளை விநாயகராலயத் தர்மகர்த்தாக்கள் சபை ஆரம்பித்த காலந் தொட்டு 1983-ம் ஆண்டு வரை ஆலயத் தர்மகர்த்தாக்கள் சபைத் தலைவராக இருந்து அன்னார் ஆலயத்துக்கு ஆற்றிய அரும்பெரும் பணிகள் இன்றும் என்றும் அவரை நினைவுகூர வைத்துக் கொண்டிருக்கின்றன, வானத்தை அளாவி நிற்கும் எழில்மிகு இராசகோபுரம், விசாலத்துடனும் ஒய்யாரத்துடனும் விளங்கும் ஆலய முன் மண்டபம், கலை அம்சம் கமழும் தேர்முட்டி, உயர்ந்து விளங்கும் தண்ணீர்த் தாங்கி, பிரமாண்டமான தோற்றத்துடன் காட்சியளிக்கும் தேர்க்கொட்டகை, அழகுடன் விளங்கும் தீர்த்தக்குளம், காரியாலயக் கட்டிடம், களஞ்சிய அறை, பஞ்சமுக விநாயகர், பிள்ளையார் வீதி, ஆலயத்தின் அலங்கார மின்னிணைப்பு, விசாலமான வீதி அமைப்பு இவையெல்லாம் அன்னாரை நினைவுகூரும் சின்னங்களாக ஆலயத்தில் திகழ்கின்றன. ஆலயத்தில் நடைபெற்ற மூன்று புனருத்தாரண கும்பாபிஷேகங்களை முன்னின்று நடாத்திய பெருமையும் பெற்றவர் அவர்.

பெரியார் அவர்கள் ஆரம்பித்த வேலைகள் யாவும் அழகாகவும், ஸ்திரமானவையாயும் எம்பெருமான் அருளால் அமைந்திருப்பதைக் காண்கின்றோம். எடுத்த காரியத்தைச்

சிந்தித்துச் செயலாற்றும் செயல் வீரனாகவும், விடாமுயற்சி யுடன் கருமமே கண்ணாக எதுவரினும் மனம் தளர்ச்சியடையாத ஆன்மபலம் கொண்டவராகவும், விருப்பு வெறுப்பற்ற நிலையில் நின்று ஆலய சேவையே தனது உயிர் மூச்சாக, 35 ஆண்டுகள் தலைவராக இருந்து ஆலய வளர்ச்சிக்கு அரும் பாடுபட்டார். ஆலயத்துக்குத் தேவையானவற்றை எல்லாம் சேகரித்தும், அமைத்தும், யாழ்நகரில் உள்ள சிறந்த ஆலயங்களின் வரிசையில் ஒன்றாக வைத்து எண்ணத்தக்க நிலைக்கு அளவெட்டி கும்பழாவளை விநாயகராலயத்தை ஆக்கிவைத்த பெருமை அவரையே சாரும் என்பது மிகையாகாது.

ஒரு கையிலே பிரம்பு, மறுகையில் திறப்புக் கோர்வை அடங்கிய பை ஒன்று, தோளிலே சால்வை, காலிலே செருப்பு வழுக்கைத் தலை, நீண்ட நரைத்த தாடியைத் தடவிக்கொண்டு ஆடி ஆடி ஆலய வீதியிலே வந்து கொண்டிருக்கும் உங்கள் மாண்பு மிகு தோற்றம், ஐயா! இதையும் நாம் மறப்போமா?

தர்மகர்த்தாக்கள் சபை
கும்பழாவளை
அளவெட்டி



# எம் அன்புத் தாத்தாவை நாம் எங்கு சென்று காண்போம்!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" — வள்ளுவன்

அளவையம்பதியின் அருள்மிகு கும்பழாவளை விநாயகன் 1956-ம் ஆண்டில் தன் மகன் மயில்வாகனத்திற்கும் மருமகன் முருகேசுவிற்கும் தொண்டர் சபை என்னும் ஓர் சற்புத்திரனை அருளினார். அம்மகன் தளிர்நடைபோடும் நேரத்தில் தன்னுருயிர் தாயை இழந்தான். அன்புடன் ஆதரிக்கும் தாயை இழந்து தவித்த நேரத்தில், அவனின் கவலையைக் கண்ணுற்ற அன்புத் தந்தை "கவலையை விடு நான் தாயாகவும், தந்தையாகவும் இருந்து உன்னை அன்புடன் வளர்ப்பேன்" என அரவணைத்துக் கொண்டார். அத்தந்தையின் அரவணைப்பிலே அன்பனாகவும், அடியானாகவும், அறிஞனாகவும் வளர்க்கப்பட்ட இம் மைந்தன் அழகுறு வாலிபனாகும் பருவத்தில் அன்புத் தந்தையை இழந்து ஆற்றொணாத்துயரில் அல்லலுறுகின்றான்.

அன்புத் தந்தையே! அருமைத் தாத்தாவே!! உங்களை நாம் மறக்கமாட்டோம். நாம் மறக்க நேரிடினும் உங்கள் அளப்பரிய ஆலயச் சேவையாம், வானளாவி நிற்கும் இராஜ கோபுரம், வந்தோரை வரவேற்கும் மகாமண்டபம், வாயிலில் நுழைந்தால் வண்ணமிகு பஞ்சமுக விநாயகர், கலைத்திறன் மிக்க தேர்முட்டி, உயர்ந்த தேர்க்கொட்டகை, தண்ணீர்த் தாங்கி அழகியற் கலைக்கு அரணாக அமைந்த தீர்த்தக்குளம், காரியாலயங்கள் ஆகியன, உங்கள் அழகிய தோற்றமாம் தாடியையும், கையில் பிரம்பையும், மடித்த கையில் பையையும், காலிலே செருப்பையும், முகத்திலே மூக்குக் கண்ணாடியையும், இறப்புக்கோர்வையும் கொண்ட பொலிவுத் தோற்றமாக முன்னிற்கின்றதே!

கும்பழாவளைப் பெருமான் இருக்கும் வரை நாம் உங்களை மறக்கமாட்டோம்.

இங்ஙனம்
கும்பழாவளைத் தொண்டர் சபையினர்
அளவெட்டி

# இசைபட வாழ்ந்து இசை வளர்த்த பெரியார்

பாரம்பரியமாக இசைத்துறையில் முன்னிற்பது எமது அளவெட்டிக் கிராமம். பல நாதஸ்வர, தவில் வித்துவான்களைத் தந்து புகழீட்டியது, ஈட்டிக்கொண்டிருப்பது எம்மூர் எனினும் வாய்ப்பாட்டு, வயலின் மிருதங்கம் போன்ற துறைகளிலும் வளர்ச்சி பெறவேண்டுமென்னும் நோக்கோடு 1963-ம் ஆண்டு சித்திரைத் திங்களில் பெரியார் திரு. செ. மயில்வாகனம் அவர்களின் முயற்சியால் அளவை இசைக்கலை மன்றம் ஒன்று உருவாகியது. அதன் தலைமைப் பதவியைப் பெரியார் அவர்கள் ஏற்றார். அது வளரத்தொடங்கியது. ஆறு மாணவர்களோடு மன்றச் சார்பில் ஆரம்பிக்கப்பட்ட இசை வகுப்பு வரவரப் பெருகியது. இன்று 50 க்கு மேற்பட்ட இசை ஆசிரியர்களை இம் மன்றம் உருவாக்கியுள்ளது. இத்தனை ஆசிரியர்களையும் உருவாக்க வித்திட்டவர் திரு. செ. மயில்வாகனம் அவர்களே ஆகும். 1964-ம், 1965-ம், 1967-ம் ஆண்டுகளில் மன்றச் சார்பில் எல்லோராலும் பாராட்டத்தக்க வகையில் மூன்று சிறந்த இசை விழாக்களை முன்னின்று நடாத்திய பெருமையும் அவர்களையே சாரும் சமூகத்துறையில் மாத்திரமன்றி, சமயத்துறையில் மாத்திரமன்றி, இசைத்துறையிலும் முன்னின்று உழைத்த பெரியாரின் மறைவு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். அவர் மறைந்தாலும் அவரின் நற்பணிகள் என்றும் அன்னாரை நினைவுகூர வைக்கின்றன.

அளவை இசைக்கலை மன்றம்

சைவப் பெரியார்

# சிவத்திரு மயில்வாகன உபாத்தியாயர்

அவர்கள்

# இறைவன் திருவடிப் பேறடைந்தார்

**'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனைய துயர்வு'**

என்னும் வள்ளுவப் பெருந்தகையாரின் வாக்குக்கிணங்க வாழ்ந்து காட்டியவர் சிவத்திரு மயில்வாகன உபாத்தியாயர் அவர்கள். இளமை தொட்டு சைவமணங் கமழும் குடும்பத்தில் அவதரித்த உபாத்தியார் அவர்கள், 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' — என்ற ஔவைப் பிராட்டியார் கவிதைப்படி, வரலாறு பேசும் சைவப் பெருமக்களின் கூட்டத்தில் ஒருவராக மதிக்கப்பட்டார், சிறப்பாக, தவயோக சுவாமிகளின் முதற் சீடராக விரும்பி யழைக்கப்பட்டார். சைவத்துறையிலும், அரசியல் சேவையிலும் எல்லோராலும் போற்றப்பெற்ற மதிப்புக்குரிய ஸ்ரீகாந்தாவை புத்திரராகப் பெற்று அவையத்தில் முந்தியிருக்கச் செய்தார். தநயனாகிய இப்பெருமகனாரும் தந்தையாருக்கு ஆற்றும் உதவியாக 'இவன் தந்தை என்னோற்றான் கொல்' என்னும் வள்ளுவர் வாய்மையை நிலைநிறுத்தினார்.

அளவெட்டியாகிய தனது சொந்தக் கிராமத்தை இருப்பிடமாக மாற்றிய பின் அளவிறந்த சேவையைக் கிராமத்துக்குச் செய்துள்ளார்கள் அச்சேவைகளில் அளவெட்டி முழுவதையும் அளாவிய சைவ வாலிப சங்கத்தின் தலைவராக முப்பது வருடங்களும், காப்பாளராக கடைசிவரையும் சேவை செய்தார்கள் இவரது சேவையையும் தலைமையையும் அளவெட்டி மக்கள் மனமார ஏற்றார்கள் சமயகுரவரதும், சந்தானாசிரியரதும் குருபூசைகளும் சிறப்பாக நடப்பதற்கும் முன்னின்றார் அளவெட்டியிலுள்ள எல்லாப் பாடசாலை மாணவருக்கும் சமய பாடப் பரீட்சைகளையும், பண்ணிசை, பேச்சுப் போட்டிகளையும் வைத்து முதன்மையடைந்த மாணவர்க்குப் பரிசில்கள் வழங்கியும் ஊக்குவித்தார் இச் சைவ வாலிப சங்கமும் மற்றும் பெருமக்களும் சேர்ந்து இவரது ஆத்மா சாந்தியடைய இறையருளைப் பிரார்த்தித்தல் நற்சேவையாகும்

அளவெட்டி சைவ வாலிப சங்கத்தார்

# அமரர் மயில்வாகனனாரும் அருணோதயாவும்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கிணங்க வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, தெய்வத்துள் தெய்வமாகிவிட்டவர் அமரர் செ. மயில்வாகனம் J. P. அவர்கள். தன்னலங்கருதாது பிறர் நலன் கருதும் சீரிய பண்பு அவருடைய வாழ்வில் பின்னிப் பிணைந்திருந்தமை அவரை ஒரு சமூக சேவையாளனாக மாற்றியது. அந்த வகையிலே ஆலயங்கள், கல்விக்கூடங்கள், சமூக முன்னேற்றச் சங்கங்கள் போன்றவற்றில் அவருடைய பணிகள் போற்றுதற்குரியதாய் அமைந்துள்ளன.

இந்த வகையிலே அருணோதய கல்லூரியின் வரலாற்று ஏட்டிலே மறக்கமுடியாத மகத்தான இடத்தை அமரர் மயில்வாகலம் அவர்கள் பெற்றுவிட்டார், அருணோதயக் கல்லூரியின் கடைசி முகாமையாளராக இருந்த பெருமை அமரருக்குரியது, அமரர் முகாமையாளராக இருந்த காலம் கல்லூரியின் பொற்காலமாக அமைந்துள்ளதை யாவருமறிவர். கல்லூரி வாழ்க்கையோடு அவர் கொண்டிருந்த ஈடுபாடு கல்லூரியை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்ல பெரிதும் உதவியது. கல்லூரி முகாமையாளராக - அபிவிருத்திச் சங்கத்தலைவராக - பழைய மாணவ சங்க போஷகராக பதவி வகித்து, அவர் தந்த ஆலோசனைகள், ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பலதுறைகளிலும் கல்லூரியைத் தரமுயர்த்த அடிகோலிவிட்டன. குறிப்பாக உயர் வகுப்புகளைக் கல்லூரியில் இடம்பெறச் செய்ய, புதிய கட்டிடங்களை அமைத்துக்கொள்ள, சின்னப்பு தம்பதிகள் மூலம் புலமைப் பரிசில்களைப் பெற்றுத்தர அமரர் மயில்வாகனம் அவர்கள் எடுத்த தீவிர முயற்சிகள் கல்லூரி உள்ளவரை கண்ணியமாகப் போற்றப்படும்.

அமரர் மயில்வாகனம் அவர்களது பிரிவு கல்லூரிக்கு ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்பதை கல்லூரி உணர்கிறத. அன்னாரது சேவைகளுக்கு கல்லூரித்தாய் சிரந்தாழ்த்தி வணங்கி, அவரது சேவைகளை என்றும் நினைவுகூர்ந்து, அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை என்றும் இறைஞ்சும்,

அதிபர், ஆசிரியர்கள்
அருணோதயக் கல்லூரி

# மகாஜன சபையும்
# பெரியார் மயில்வாகனமும்

" பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து "

என்ற வான்புகழ் வள்ளுவன் வாய்மொழிக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் பெரியார் செ. மயில்வாகனம் அவர்கள். பட்டம் பதவியை நாடி, புகழ் தேடி அலையும் இக்காலத்தில் புகழ் விரும்பாத ஒருவராகத் திகழ்ந்தார். தனக்குக் கிடைத்த சமாதான நீதிபதி பதவியையே உடல் நிலை சேவையாற்ற இடங்கொடாதெனக் கருதியபோது, துறந்தார். தன்னலங் கருதாமல் பொதுநலனையே குறிக்கோளாகக் கொண்டு சேவையாற்றினார். அவர் சென்ற இடமெல்லாம் தனது முத்திரையை பொறித்துக் கொண்டார்.

அளவெட்டிக் கிராமத்தில் பொதுப்பணிக்கென நிறுவப்பட்ட நிறுவனம் மகாஜன சபை. இது தன்னகத்தே கிராம அபிவிருத்திச் சங்கத்தையும், சனசமூக நிலையத்தையும் கொண்டு விளங்கியது. ஒரு காலகட்டத்தில் மகாஜனசபை ஒழுங்காக இயங்காமையால் பொதுக் கூட்டத்தைக் கூட்டும்படி ஒரு துண்டுப் பிரசுரம் வந்தது. அது காரணமாக கூட்டம் கூட்டப்பட்டது. பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மக்கள் இரு பிரிவினராக விளங்கினர். உள்ளூர்ப் பிரமுகர் சிலர் இரு பகுதியினரையும் சமரசம் செய்துவைத்து திரு. செ மயில்வாகனம் ஆசிரியர் அவர்களை அதன் தலைவராக்கினர். அவரது வழிநடத்தலில் சபை பல வழிகளிலும் முன்னேறியது. அளப்பரிய சேவையாற்றியது,

பொதுக் கிணறுகள், பொது மலசலகூடங்கள், மடங்கள், சலவைத் தொழிலாளருக்குரிய தொட்டிகள், நெசவு நிலையங்கள், பாலங்கள், வீதிகள் என்பன எல்லாம் அவரது முயற்சியால் ஆக்கப்பட்டன.

கிராமந்தோறும் நெசவு நிலையங்களை அமைப்பதற்கு அரசாங்கம் உதவிபுரிய முன்வந்தபோது அதனை பயன்படுத்தி மகாஜன சபைக்கு அருகாமையில், தெற்கு அளவெட்டியில், வடக்கு அளவெட்டியில், நெசவு நிலையங்களை உருவாக்கித் தந்தார் நெசவு நிலையங்களுக்கு ஒவ்வொரு நாளும் சென்று ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார். இவற்றை வடமாகாணத்திலேயே சிறந்த நெசவு நிலையங்களாகத் திகழச் செய்த பெருமை அவரைச் சார்ந்தது. அளவெட்டி வாழ் பெண்பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து வாழ வழிகாட்டினார். அளவெட்டிக்கு மின்சாரத்தைக் கொண்டுவந்து கிராமத்திற்கே ஒளியூட்டிய பெருமை பெரியார் செ. மயில்வாகனம் அவர்களுக்கே உரியது.

அளவெட்டி மகாஜன சபை

௨

# மாமா எங்கும் போய்விடவில்லை

அன்று வெள்ளிக்கிழமை மாலை 5-45 மணி எமது வீட்டிலே உறவினர் நண்பர் எல்லோரும் கூட்டமாக இருந்து எமது மாமாவின் ஆன்மீக ஒளி பொருந்திய முகத்தையே பார்த்தவண்ணம் இருக்கிறோம். அந்த அறிவுச்சுடர் தீட்சண்யமான கண்களின் ஒளி திடீரென மறைந்தது. ஆம் எமது மாமா இவ்வுலகை நீத்து விட்டார். அதே வேளையில் கும்பழாவளை விநாயகரது முடியிலிருந்த மாலையும் தானாகவே அறுந்து விநாயகரின் பாதத்தில் விழுகிறது. கும்பழாவளை விநாயகராலய வளர்ச்சியின் முடியில் மாலையாக விளங்கியவர் இன்று விநாயகப் பெருமானின் பாதங்களைச் சேர்ந்து விட்டார் என்பதனைத் தான் அந்த தெய்வீக நிகழ்ச்சி காட்டியதோ!

அறிந்தோர் அனைவராலும் மாஸ்டர் என அன்பாக அழைக்கப்பெற்ற மாமா, எமக்காக மட்டும் வாழ்ந்தவரல்ல. பொதுவாழ்வு வாழ்ந்தவர். கல்வியை மட்டுமல்ல தனது வாழ்வையே பிறருக்காகச் செலவிட்டவர். மாலற நேயம் மலிந்த அவரது தோற்றமும் ஆலயப் பணியும் அனைவரது மதிப்பையும் பெற்றவையாகும்.

எமது சிறு பிராயத்திலிருந்தே எம்மைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தமை மட்டுமல்ல எமது பிள்ளைகள் மீதும் அன்பு சொரிந்து அன்புத் தாத்தாவாக விளங்கியவர்' எமது வாழ்க்கைப் பாதையைச் சீராக அமைக்க புத்திமதிகள் கூறிச் செப்பனிட்டவர். இவ்வாறு பலவழிகளிலும் எம்மோடு பின்னிப் பிணைந்து விட்ட மாமா இன்று எம்மிட

மில்லை. அவர் எமக்காற்றிய கடமைகளுக்கு நலம் நிறை வாக நன்றிக் கடன் தீர்க்கவில்லை என்றே கூறவேண்டும் அவ்வளவு பெரிது அவர் எமக்குச் செய்த கடன். முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு பிடிசாம்பராய் வெந்து மண்ணுவது உண்மை என்பதை அறிந்தும்கூட மாமாவைப் பிரிந்த சோகம் எமது மனதைவாட்டுகின்றதே. மாமா மாமா என்றே தாத்தா தாத்தா என்றே கதறுவதனால் ஆவதென்ன? ஆனால் எம்மையும் அறியாமல் எமது வாய் கதறுகிறது. அவர் தங்கிய அறை, அவர் வீற்றிருந்த நாற்காலி, அவர் உபயோகித்த பொருட்கள் அவரது அறிவுப்பசிக்குத் தீனி போட்ட அறிவு நூல்கள் இவையாவும் அந்தப் புனித உருவத்தை அவரின் செயற்பாட்டைப் பறை சாற்றிய வண்ணம் இருக்கின்றன. அவர் இப்பொழுதும் எம்மிடையே வாழ்கிறார் போல உணர்வை அளிக்கின்றன.

அவரது பூதவுடல் வேகிவிட்டாலும் அவரது ஒளி பொருந்திய ஆன்மாவைக் கும்பழாவளையானின் பாதங்களின் கீழ்க் காணமுடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. ஏனெனில் அவர் எங்கோ போய்விடவில்லை கும்பழாவளையானின் பாதக்கமலங்களைப் பற்றியே வாழ்கிறார்.

"யோகஸ்தான்"
அளவெட்டி.
22-07-1984.

அன்பின்
மருமகன் ஐ. யோகசுந்தரம்
குடும்பத்தினர்

## தேவாரம்

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர்
இனத்தகத்தான் இமையவர் தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்துச்சி யுள்ளான்
காளத்தியான் அவன் என் கண்ணுளானே.

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப்பரப்பே
நீருறுதீயே நினைவதேல் அரிய
நில்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப் பெருந்துறை யுறை சிவனே
யாருறவெனக்கு இங்காரயலுள்ளார்
ஆனந்தமாக்கு மென்சோதீ

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்குந் தேனே

அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே;

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகும் குழறவுழறி உமைமணவாளனுக்கு ஆட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமைவேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாழ்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## தாயுமான சுவாமிகள் பாடல்

இன்னம் பிறப்பதற் கிடமென்னின் இவ்வுடலம்
இறவாதிருப்ப மூலத்து
எழுமங்கி அமிர்தொழுகு மதிமண்டலத்திலுற
என்னம்மை குண்டலினிபால்

பின்னம் பிறக்காது சேயென வளர்த்திடப்
பேயேனை நல்கவேண்டும் ;
பிறவாத நெறி யெனக்குண்டென்னின் இம்மையே
பேசு கர்ப்பூரதீபம்

பின்னும் படிக்கு அகண்டாகார அன்னைபால்
வினையேனை ஒப்புவித்து
வீட்டுநெறி கூட்டிடுதல் மிகவும் நன்று இவையன்றி
விவகாரமுண் டென்னிலோ
தன்னந்தனிச் சிறியன் ஆற்றிலேன்; போற்றி வளர்
சன்மார்க்க முத்திமுதலே !
சர்வபரிபூரண அகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே.

## திருமந்திரம்

எங்குந்திருமேனி எங்குஞ்சிவசக்தி
எங்குஞ்சிதம்பரம் எங்குந்திருநட்டம்
எங்குஞ் சிவமாயிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருள் தன் விளையாட்டே

ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்தமாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந்தானுக்கே

## ஞானவாசிட்டம்

பொன்னுலகத்தினில் புவியில் அந்தரத்து
என்னுடை உட்புறத்து இலங்குகின்றது
மன்னு சிற்சோதியே வடிவும் யாவுமாய்த்
துன்னுவது அப்பொருள் தொழுதிறைஞ்சுவாம்.

அற்பம் உனக்கொன்றினிதாகில் அதனால் பிறப்பிலகப்பட்டாய்
பொற்ப, உனக்கொன்றினும் இனிமை பூணாதென்னில் பிறப்பகன்றாய்
நிற்பநடப்ப பொருட்டிரளின் நிலைக்குத்திரண முதலாகத்
தற்பமுறு பொன்முடிவாகச் சற்றும் இனிமையுறவேண்டாம்;

திருச்சிற்றம்பலம்

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு குடும்பத் தலைவராக முன்நின்று நல்வழிகாட்டி, இன்ப துன்பங்களிலும் பங்கு பற்றியதோடு எமது கிராமத்தில் இயங்கும் சபைகள் அனைத்திலும் தலைமை தாங்கி அவற்றின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தும், கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவராக தனது இறுதி மூச்சுவரை சேவை செய்தும் வாழ்ந்த எமது அன்பு மாமாவின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், சரீர உதவி செய்தும், மயானம் வரை சென்று தகனக் கிரியைகளிலும் பங்குபற்றியும், எமது அழைப்பை ஏற்று அந்தியேட்டிக கிரியைகளிலும் மகேசுர போசனத்திலும் பங்குபற்றியும் சிறப்பித்த உற்றார், உறவினர், நண்பர்கள், சகல சபை உறுப்பினர்கள், யாவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம்.

வணக்கம்

"யோகஸ்தான்"
அளவெட்டி.
22-7-1984

ஐ. யோகசுந்தரம்
குடும்பத்தினர்

ஸ்ரீமகள், அளவெட்டி.